[30th March 1966

கனம் திரு. பூ. கக்கன் : இயந்திரங்களைப் பெற்றுத்தான் எல்லாம் நன்மை அடைய முடியும் என்று சொன்னேன். ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டால், ஒரு நட்டுப்போனால்கூட அத்தனையும் செய்து கொடுக்கவேண்டுமென்று இல்லாமல் அதையெல்லாம் அவர்களே செய்துகொள்ளவேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது 1963-64-இல் 27 என்றும் 1964-65-ல் 19 என்றும் சொன்னார்கள் . . . .

கனம் திரு. பூ. கக்கன் : 19 என்று சொல்லவில்லை, 39 என்று சொன்னேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : 19 என்று எனக்குக் கேட்டது, ஆகவே குறைந்ததற்குக் காரணம் என்ன என்று கேட்கலாம் என்று நினைத்தேன்.

Harijan Welfare Elementary School, Kilambil

* 510 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any case of food poisoning was reported, in a Harijan Welfare Elementary School at Kilambil in Lalgudi taluk; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி கலெக்டர் அனுப்பியுள்ள அறிக்கையின்படி, லால்குடி வட்டம் கீழ் அன்பில் ஹரிஜன நல உயர் தொடக்கப் பள்ளியில் 9—12—1965 அன்று 211 சிறுவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்பட்டது. உணவு உண்ட சுமார் அரை மணி நேரத்துக்குப் பிறகு 15 சிறுவர்கள் இரண்டொரு முறை வாந்தியெடுத்தனர். அவர்களில் சிலரிடம் இலேசான மயக்க அறிகுறிகள் தென்பட்டன. அவர்களுக்கு உடனடியாக அன்பில் கிராம மருந்தகத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டது. லால்குடி அரசாங்க மருத்துவ மனையின் மருத்துவ அதிகாரியும் அச்சிறுவர்களுக்கு புறநோயாளிகளுக்குரிய சிகிச்சை அளித்தார். மாவட்ட நல அதிகாரி 10—12—1965-ல் அப்பள்ளியைப் பார்வையிட்டு, எல்லாச் சிறுவர்களும் உடல் நலத்துடன் இருப்பதைக் கண்டார்.

திரு. வை. சங்கரன் : என்ன காரணத்தினாலே இது போன்ற சம்பவங்கள் ஏற்படுகின்றன, இதற்கு யார் பொறுப்பு என்று கண்டுபிடிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அது விசாரணை செய்யப்பட்டு கிண்டிக்கு அனுப்பி அதைப் பார்த்திருக்கிறார்கள். அதில் விஷம் இல்லை என்று கலெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த பதில் இங்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு எந்தக் காரணமும் இல்லையென்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

30th March 1966]

திரு. இராம. அரங்கண்ணல் : இதுபோல் ஹரிஜன ஹாஸ்டல்கள், வேறு இடங்களில் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற நண்பகல் உணவு ஆகியவைகளில் தொடர்ந்து நச்சுப் பொருள்கள் கலப்பதும், மாணவர்கள் ஏதாவது வியாதிகளுக்கு உள்ளாவதும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. உயிரோடு விளையாடுகின்ற இந்த விஷயத்தில் ஒரு தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்த முன்ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : எல்லா விடுதிகளிலும் மாணவர்களுக்கு முறையாக உணவு போடவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம். விஷம் ஏதும் விழுந்துவிடாமல் இருப்பதற்காக மூடிவைக்கவேண்டும், எந்த விதமான ஆபத்தும் ஏற்படவிடக்கூடாது என்பதைப்பற்றி அரசாங்கத்தின் மூலமாக முன்னெச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Scarcity of fertilisers in Madurai district

* 511 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware of the scarcity of nitrogenous fertilisers in Madurai district and the consequent hardship to ryots thereat; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) மத்திய ரசாயன உரத்தொகுப்பு ஏற்பாட்டின் கீழ் இம்மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட ரசாயன உர அளவையொட்டி இம்மாவட்டத்தின் தேவைக்கு எந்த அதிக அளவுக்கு உரம் வழங்க முடியுமோ அந்த அளவு உரம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : இந்த மாதிரி கடந்த காலத்தில், சமீபத்திலே ஏற்பட்டபொழுது உரம் இடவேண்டிய காலத்திலே வரவில்லை, மிகவும் தாமதமாக வந்தது, வந்தபிறகுகூட போதுமான அளவு விவசாயிகளுக்கு எல்லாம் கிடைக்கவில்லை என்பது சர்க்காரின் கவனத்திற்கு வந்ததா ? அப்படியானல், போதுமான அளவு கொடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : மதுரை ஜில்லாவைப் பொறுத்த வரையில் கூடுதலாகத்தான் கொடுத்திருக்கிறார்கள். இதர ஜில்லாக்களில் மிச்சப்பட்டதைக்கூட வாங்கிக்கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய மாகாணத்திற்கு வருகிற கோட்டா வரவில்லை. இருந்தாலும் மதுரை ஜில்லாவிற்கும் கவனம் செலுத்தப்பட்டு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்